முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1110

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.10.2022, வியாழக்கிழமை

1. ஓங்காரக்குடில் படைத்த அண்ணலே
ஓங்கார உலகம் அமைக்க வேண்டி
ஓங்காரன் என் அவதாரமாக வந்த வள்ளலே
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் உந்தனுக்கு
2. உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
உரைத்திடுவேன் சுபகிருது நங்கை திங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 26 ம் நாள் 13.10.2022, வியாழக்கிழமை)
சிந்தை வைத்து என் அவதாரமாகவே
சித்திகளோடு இந்த கலியினில் அற்புதம் புரிய
3. அற்புதம் புரிய மாதவசியாக வந்த அரங்கனே
உன் சன்மார்க்கம் இந்த உலகை மாற்றும்
ஏற்பு கொண்டு உன் தர்மத்தைக் கைக்கொள்ளும்
யுகபரத்தின் மக்களெல்லாம் ஞானிகளாக
4. ஆகவே மாற்றங்கண்டு கலியின் இடர்களை
ஆற்றல்பட வெல்லும் அன்பர்களாகி
ஜெகமெங்கும் ஞானவான்கள் நிறைந்த காலமாக
செப்பிடுவேன் அரங்கன் உன் அவதார நோக்கம்
5. நோக்கமெல்லாம் இனிதே பூர்த்தியாகும்
நிலவுலகில் உன் ஆசி பெற்ற அன்பர்களே
அன்பர்களே ஞானவான்களாக சிறந்து
அகிலத்தை மாற்றும் ஆற்றலும் வரமும் ஆறுமுகன் என்னால் அடைவர்
6. அடையவே உன்னை கண்டு தேறி வரும் மக்களெல்லாம்
ஆறுமுகன் என்னை கண்டு தேறி
அழியாமையை ஆற்றல்பட இந்த யுகத்தில்
பெறுவது உறுதி உறுதி
7. உறுதி கொண்டு அரங்கன் உன்வழி
உயர்வாக ஆறுமுகன் இயக்குகின்றேன்
கருதி உன் வழி வந்து இணைந்து
கந்தா கடம்பா அரங்கா முருகா என எவர் ஜெபதபம் புரிந்து
8. புரிந்து உன் தர்மத்தை காக்கின்றாரோ
பூவுலகில் அவர்கள் எல்லாம்
ஞானிகளாக சிறந்து ஆற்றல்பட யுகமாற்றம் புரிவர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–